# தமிழர் கல்வி மேம்பாட்டுப் பேரவை

## அரையாண்டுத் தேர்வு - கல்வியாண்டு 2009 - 2010

## தமிழ்மொழி - வளர்நிலை 4

சுட்டெண்:.......................................................... நேரம்: 90 நிமிடங்கள்

**1) அடைப்புக்குறிக்குள் உள்ள சொற்களில் மிகப்பொருத்தமானதைத் தெரிந்து, கீறிட்ட இடங்களில் எழுதுக.**

1. மிகச் சிறந்த அறநூல்களையும் இலக்கியங்களையும் கொண்ட மொழி ____________________. (மலையாளம், தமிழ், இந்தி)

2 மக்கள் கற்கிற அளவுக்கு ஊறுவது ____________________
(சினம், கேணி, அறிவு)

3. தன் ____________________ கொண்டு அம்பலம் ஏறவேண்டும்.
(பழம், பளம், பலம்)

4. தமிழரின் தாயகங்களில் ஒன்று ____________________

(சீனா, ஈழம், அமெரிக்கா).

5. தமிழின் இலக்கணநூல்களில் முதன்மையானது ____________________
(தொல்காப்பியம், சிலப்பதிகாரம், திருக்குறள்)

6. தமிழில் தனித்து இயங்காத எழுத்துகள் ____________________
(உயிரெழுத்துகள், முதலெழுத்துகள், மெய்யெழுத்துகள்)

7. தொன்மை என்றால் ____________________ எனப் பொருள்.
(மிகப்புதுமை, மிகஇனிமை, மிகப்பழைமை)

8. முயற்சி ____________________ தரும்.
(தாழ்வைத், உயர்வைத், இகழ்வைத்)

9. ஒழுக்கத்தைக் கூறும் நூல்களை ______________________ என்பர்.
(நாடகநூல்கள், கவிதைநூல்கள், அறநூல்கள்)

10. முத்தமிழ்க்காப்பியம் என அழைக்கப்படும் நூல் ______________________.
(புறநானூறு, ஆத்திசூடி, சிலப்பதிகாரம்)

11. தமிழர்கள் நாம் தமிழ்ப் பண்பாட்டை வாழ்வில் ______________________.
(பேணுவோம், வெறுப்போம், நீக்குவோம்)

12. காப்பியம் என்றால் ______________________ எனப் பொருள்படும்.
(நெடுங்கதை, சிறுகதை, குறுங்கதை)

13. மாறன் ______________________ பொருட்களை எடுத்து மேசையில் வைத்தான்.
(உனது, தனது, எனது)

14. உலகின் நல் அமைதிக்கும் நல் வாழ்விற்கும் இன்றியமையாதது ______________________.
(குடும்பம், பணம், பொருள்)

15. ஓர் இனத்தின் தனித்துவத்தை ______________________ காட்டுகின்றன.
(பணம், பெருமை, விழாக்கள்)

16. ஆடுவோருடைய துள்ளலோடு பொருந்தும் தாளமாக அமைவது
______________________(சிலம்படி, கோலடி, காவடி)

17. பழந்தமிழர் தோற்கருவிகளின் நுணுக்கங்களை ______________________ இருந்தனர்.
(அறிந்த, அறிந்து, அறியும்)

18. எத்தனை வகையான வண்ண மலர்கள். ______________________ எவ்வளவு அழகானது.
(அவற்றுள், இவற்றுள், ஒவ்வொன்றும்)

19. யாழ் இசைப்பவர்கள் அன்று ______________________ என அழைக்கப்பட்டனர்.
(கூத்தர், பாணர் , மறவர்)

20. ஒருவன் தன்னைத் தான் விரும்பினால், மற்றவருக்குத்______________________செய்ய மாட்டான்.
(நன்மை, அன்பு, தீங்கு)

21. காலபோக நெல்லை விதைக்கிற காலம்______________________.
(ஆடி, ஐப்பசி, மாசி)

22. கீழ்வானம் வெளுக்கும் வேளை ______________________ எனப்படும்.
(மாலை, பகல், வைகறை)

23. முழவுகளுள் ஒன்று ______________________.
(வீணை, உடுக்கு, குழல்)

24. ஐந்து வீட்டுக்கு ஒரு ______________________.
(முற்றம், முற்ரம், முர்றம்)

25. இடர் வரும் வேளையில் உதவாத ______________________ நம்பாதே.
(பகைவனை, நண்பனை, குழந்தையை)

26. ஏதிலிகள் ______________________ கடந்து சென்றனர்.
(ஆறைக், ஆறுவைக், ஆற்றைக்)

27. வடநாட்டு மன்னர்களான ______________________ தமிழர் வீரத்தை இகழ்ந்து பேசினர்.
(சேரனும் சோழனும், கனகனும் விசயனும், பாண்டியனும் சேரனும்)

28. தமிழிலுள்ள 247 எழுத்துகளைத் தமிழ் ______________________ என்பர்.
(முதலெழுத்துகள், உயிரெழுத்துகள், நெடுங்கணக்கு)

29. ஐயந்திரக் கற்றல் என்றால் ______________________ எனப் பொருள்.
(குழப்பமாகக் கற்றல், தெளிவாகக் கற்றல், விளையாடிக் கற்றல்)

30. விளையாட்டுப் போட்டி ______________________ தொடங்க உள்ளது..
(இப்பொழுது, அப்பொழுது, எப்பொழுது)

(புள்ளிகள் 30)

2) **கீழ்க்காணும் பகுதியை வாசித்து, தரப்பட்டுள்ள சொற்களில் இருந்து பொருத்தமானதைத் தெரிந்து கீறிட்ட இடங்களில் எழுதுக.**

| பெறுகின்றோம் | செல்வம் | பாடினார் | உயர்ந்த | நெல் |
|---|---|---|---|---|

நீர் நிறைந்த ஆறுகள் ஒரு நாட்டின் சிறந்த______________. அவை நாட்டைச் செழிப்படையச் செய்கின்றன. நாட்டிற்கு அழகைத் தருகின்றன. அதனால் ஔவையார், 'ஆறில்லா ஊருக்கு அழகு பாழ்' எனப் ______________. ஆறுகள் ______________ மலை உச்சியில் பிறக்கின்றன. நன்னீரை ஏந்திக் கொண்டு பாய்கின்றன. பள்ளங்களில் குதிக்கின்றன: செல்லும் வழிகளிலே நீரை ஊட்டுகின்றன. ஆற்றுநீரால் ______________விளைகிறது. கனிதரும் மரங்களும் காய்கறிச் செடிகளும் பூத்துக் காய்த்துக் குலுங்குகின்றன. அவற்றிலிருந்து பல உணவுவகைகளை நாம் ______________ எமது பசியைப் போக்க ஆறுகள் உதவுகின்றன. இயற்கையளித்த கொடைகளில் ஆறுகள் மிகவும் பயனுள்ளவை.

(புள்ளிகள் 05)

3) **கீழே தரப்பட்டுள்ள பாடநூல் வினாக்களுக்கு விடை தருக.**

1. இனிய நண்பனை எப்போது அறியலாம்?

______________________________

2. இரவெல்லாம் பூங்காடு பகலெல்லாம் வெறுங்காடு. அது என்ன?

______________________________

3. முக்கனிகளும் முழுப்பயன் தரும் காலம் எது?

______________________________

4. கோலாட்டம் இன்று என்ன கலையாக மாறியுள்ளது?.

______________________________

5. திராவிடமொழிகளின் மூலமொழி எது?

______________________________

(புள்ளிகள் 10)

4) **கீறிட்ட இடங்களில் பொருத்தமான சொல்லை எழுதி, வாக்கியங்களை (சொல்லியங்களை) நிறைவு செய்க.**

| | | | | |
|---|---|---|---|---|
| விறுவிறு | அக்கம்பக்கம் | கீச்கீச் | விழுந்துவிழுந்து | பழகப்பழகப் |

1. ________________ பாலும் புளிக்கும் என்பது பழமொழி.

2. கரடியைக் கண்ட வேழன் ________________ பார்த்து விட்டு மரத்தில் ஏறினான்.

3. கோதை பள்ளிக்கு நேரமாகி விட்டதால் ________________ என நடந்தாள்.

4. பறவைகளின் ஒலி ________________ எனக் கேட்டது.

5. நண்பன் சொன்ன நகைச்சுவையைக் கேட்ட வேழன் ________________ சிரித்தான்.

(புள்ளிகள் 05)

5) **தரப்பட்டிருக்கும் பகுதியை வாசித்து, கீழுள்ள வினாக்களுக்கு முழுவிடை தருக.**

மாறன் வீட்டிற்கு அண்மையில் தாமரைக் குளம் ஒன்று உண்டு. மழைக்காலத்தில் அது நீர் நிறைந்து காணப்படும். ஒருநாள் மாறன் தனது நண்பன் அழகனுடன் நீராடச் சென்றிருந்தான். அங்கு அவர்களைத் தவிர வேறு எவரும் இல்லை. மாறனுக்கு ஓரளவுக்குத் தான் நீந்தத் தெரியும். அழகனோ நன்றாக நீந்துவான். அவன் குளத்தின் நடுப்பகுதிக்கு நீந்திச் சென்றான்: ஒரு தாமரை மலரைப் பறித்து வந்தான். மாறனுக்கும் தாமரை மலரைப் பறிக்க வேண்டும் என்று ஓர் ஆசை ஏற்பட்டது. அவன் நீந்திச் சென்று குளத்தின் நடுப்பகுதியை அடைந்தான். தாமரை மலரை எட்டிப் பறிக்க முயன்றான். அவ்வளவு தான்! நிலை தளர்ந்து நீருள் மூழ்கத் தொடங்கினான். நீருக்குள் மூழ்கிக் கொண்டிருக்கும் போது, யாரோ தனது தலைமயிரைப் பிடித்து இழுப்பதை மாறன் உணர்ந்தான். கண்விழித்துப் பார்த்த போது கரையில் இருந்தான். அழகன் தான் தன்னுயிரைக் காப்பாற்றினான் என அறிந்து, அவனைக் கட்டியணைத்தான். அழகனை விட உற்ற நண்பன் வேறு யார் இருக்க முடியும்?

1. மாறனும் அழகனும் நீராட எங்கே சென்றனர்?

________________________________________

2. மாறனுக்கு என்ன ஆசை ஏற்பட்டது?

______________________________________________

______________________________________________

3. அழகனுக்கும் மாறனுக்கும் உள்ள உறவு முறை என்ன?

______________________________________________

______________________________________________

4. மாறன் ஏன் நீருக்குள் மூழ்கினான்?

______________________________________________

5. அழகனை உற்ற நண்பன் என்று எவ்வாறு சொல்லலாம்?

______________________________________________

(புள்ளிகள் 10)

6) கீழே தரப்பட்டுள்ள சொற்களை உமது வாழிடமொழியில் எழுதுக.

நாடகம் - ______________________________

நட்பு - ______________________________

கோடை - ______________________________

விண்ணுந்து - ______________________________

தபால் நிலையம் - ______________________________

(புள்ளிகள் 05)

**7) கீறிடப்பட்ட இடங்களில் ஏற்ற சொற்களை எழுதி, வாக்கியங்களை (சொல்லியங்களை) நிறைவு செய்க.**

1. கற்கக் கற்க அறிவு ______________________.
2. வருகிற சனிக்கிழமை தமிழ்த்திறன் போட்டி ______________________.
3. நாலடியாரில் நட்பின் உயர்வு பற்றி ______________________.
4. உலகில் பல்வேறு இனங்களைச் சேர்ந்த மக்கள் ______________________.
5. அரசன் படை நடத்திச் ______________________.

(புள்ளிகள் 10)

**8) தரப்பட்டுள்ள சொற்களுக்குப் பொருள் விளங்குமாறு வாக்கியங்கள் (சொல்லியங்கள்) எழுதுக.**

1. குடும்பம்:

______________________________________________

2. நாட்குறிப்பு:

______________________________________________

3. ஆடிப்பிறப்பு:

______________________________________________

4. முயற்சி:


______________________________________________

5. இனிமை:

______________________________________________

(புள்ளிகள் 10)

9) **தரப்பட்டுள்ள படத்தைப் பார்த்து, 30 சொற்களுக்குக் குறையாமல் உங்கள் கற்பனையில் கதை எழுதுக.**



ஒருநாள் இளவரசி பந்து விளையாடிக் கொண்டிருந்தாள்.

______________________________________________

______________________________________________

______________________________________________

______________________________________________

______________________________________________

______________________________________________

______________________________________________

______________________________________________

______________________________________________

(புள்ளிகள் 15)